[23rd September 1958

மைசூர் அரசாங்கத்திற்குமிடையே உள்ள ஒப்பந்தம் என்ன ? அதன் விளைவாக எவ்வளவு தண்ணீர் வரவேண்டும் ? அதை எப்போது விடுவார்கள் ? அல்லது இப்படியே இருக்க வேண்டுமா ? மத்திய சர்க்கார் இதிலே தலையிட்டு ஏதேனும் செய்யவில்லையா ? இதையெல்லாம் குறித்து அரசாங்கம் ஒரு சிறிய அறிக்கை ஒன்றைத் தயார் செய்து வைத்தால் நிலைமை என்னவென்பது தெரியும். இதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இந்தப் பிரச்னையின் மீது முடிவு காண பாராளுமன்ற அங்கத்தினர்களும், எலக்டிரிசிடி மந்திரியும் நானும் டில்லியில் நடைபெற்ற கான்பரென்சில் கலந்து கொண்டோம். அங்கு விவாதம் செய்யப்பட்டது. இருந்தாலும், இரு சர்க்காரிடத்திலே சமரசமாகப் பேசி முடிவுகாண இர்ரிகேஷன் மந்திரி அவர்கள் தென்னாட்டுக்கு வரும்போது, இது சம்பந்தமாகப் பேசுவதாகச் சொன்னார்கள்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்கள் ஹாஜா ஷெரீப் அவர்களும் ராமலிங்க படையாச்சி அவர்களும் போட்ட கேள்விகள் இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை அதற்குத் தனி கேள்விகள் போடவேண்டும்.

Second Five-Year Plan

* 440 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to State—

(*a*) whether any cut is to be effected in the amount allotted for this State under the Second Five-Year Plan as a result of the discussion in the National Development Council held in May 1958; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) At its meeting on the 3rd and 4th May 1958, the National Development Council considered the question of the total outlay to be undertaken in the public sector during the period of the Second Plan in the light of the progress made during the first two years and the steps taken to raise additional resources. It was decided that the Plan in the public sector should be divided into two parts, viz., Part A involving a total outlay of Rs. 4,500 crores, and Part B a total outlay of Rs. 300 crores. The lists of projects to be included in the two parts of the Plan are to be settled after discussion between the Planning Commission and the Central and State Governments. The Planning Commission is now engaged in discussions with the Central Ministries and is expected to address State Governments shortly. Since then we have been addressed and we have had discussions with the Planning Commission and there is not likely to be any cut in the Plan.

* 441 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the decisions taken by the National Development Council at its meeting during May 1958, concerning the Second Five-Year Plan targets for our State; and

(*b*) whether any reduction is proposed in the financial targets and if so, to what extent?

23rd September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAN : The attention of the hon. Member is invited to the answer given to Starred Question No. 440 put by the hon. Member, Sri N. K. Palanisami.

SRI N. K. PALANISAMI : 4,800 கோடியிலிருந்து 4,500 கோடியாகக் குறைந்துவிட்டதன் காரணமாக சோஷல் வெல்பேர் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது இம்மாகாணத்தில் இந்த சோஷல் வெல் பேர் ஸ்கீமெல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருச்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் கேள்வி கேட்ட பிறகு பதில் என்ன சொன்னேன் என்பதைப் பார்த்துக் கேட்டால் நலமாக இருக்கும். நான் சொன்னேன், நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் எந்த விதமான 'கட்டும்' கிடையாது. 152 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் அப்படியே நிறைவேறப் போகின்றன. அதிகமாக ஆனாலும் ஆகலாம், ஆனால் குறையாது என்று நம்புகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : ஆங்காங்கு நண்பர்கள் இந்த சர்க்கார் சுகமில்லை, இது சரியாக வேலை செய்கிறதில்லை என்று சொல்வதால் பொது மக்களுடைய ஒத்துழைப்புக் குறைவதால், திட்டங்கள் நிறைவேறுவது தடைபடுகிறது என்று சொல்லப்படுவதில் ஆதாரம் இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதிலே இருக்கக்கூடிய சூழ் நிலையில்தான் வேலை செய்யவேண்டும். திட்டம் சரியாக இல்லை, சரியாக நிறைவேறவில்லை என்று சொல்லிக்கொண்டிருப்பதால் என்ன கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அந்தச் சூழ்நிலையில் திட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்பது சர்க்காருடைய கொள்கை. அப்படியே நிறைவேற்றிக் கொண்டும் வருகிறது.

SRI K. R. NALLASIVAM : உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்கிறோம். நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் உணவு உற்பத்திக்கான தொகையை அதிகப்படுத்தி திட்டத்தை மாற்ற சர்க்கார் முயற்சிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முன்பு சொன்னப் பிரகாரம் 152 கோடி அளவிற்கு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நமக்கு அனுமதி கிடைத்திருக்கிறது. அதை எந்த அளவுக்கு மாற்றியமைக்க வேண்டுமென்பது இங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பொறுத்தது. இப்போது இருக்கக்கூடிய நிலைமையில், விவசாயத்திற்கு எத்தனை ரூபாய் ஒதுக்குகிறோமோ அத்தனை ரூபாய் செலவழிக்க முடியாது என்று தெரிகிறது. வேறு இனங்களுக்கு மாற்ற வேண்டியிருக்கிறது. எடுத்துக்கொள்ளக் கூடிய எல்லாத் திட்டங்களுக்கும் வேண்டிய நிதி இருக்கிறது.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : மத்திய சோஷல் வெல்பேர் போர்டு கொடுக்கிற தொகையும் இந்த 152 கோடி ரூபாயிலே அடங்கியிருக்கிறதா ? அடங்கியிருந்தால் இதிலே நமக்கு எவ்வளவு விகிதாசாரம் கிடைக்கவேண்டுமோ, அதை முழுவதும் செலவழிக்க சர்க்கார் திட்டம் போட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தத் தொகை முழுவதும் சேரவில்லை. மத்திய சர்க்கார் நேரடியாகக் செலவழிக்கக்கூடிய திட்டங்கள் இதிலே சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : அபிவிருத்தித் திட்டங்களை நிறை வேற்றுவதற்காக வேண்டி சர்க்கார் மற்ற மற்ற கட்சிகளுடைய உத வியை நாடியதுண்டா ? அப்படி நாடியிருந்தால் எந்தெந்த வகையிலே நாடியிருக்கிறது ? ஒன்றுபட்டு இயங்கக்கூடிய நிலைமை ஏற்படவேண்டு மானால், தவறாகப் பிரசாரம் செய்கிறார்கள் என்ற கேள்வி எப்படி எழும் ?

[23rd September 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : It is a suggestion for action. As a matter of fact, this Government have taken into confidence the Opposition parties also in various matters. As a matter of fact the entire matter has been discussed in this House where all the parties are represented.

SRI A. GOVINDASAMI : இப்பொழுது ஒதுக்கியிருக்கிற 152 கோடி ரூபாய் போதாது என்று பிளானிங் கமிஷனிலே நமது நிதி அமைச்சர் அவர்கள் வாதாடியது உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எப்பொழுதும் நாம் போதும் என்று சொல்வோமேயானால் அது நம்முடைய முன்னேற்றத்திற்கு அறிகுறியில்லை. போதாது என்கிற நிலையில் இருக்கும்பொழுதுதான் வேண்டிய அளவு முயற்சிசெய்துகொண்டிருக்கிறோம் என்று அர்த்தம். இந்த 152 கோடி ரூபாய் செலவழிக்க முடியவில்லை என்றால் அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான் அர்த்தம்.

SRI S. RAMALINGA PADAYACHI : 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் விவசாயிகளுக்கு கடன் கொடுக்கப்பட்டது கடன் கொடுக்கும் பொழுது வட்டி இல்லை என்று சொல்லப்பட்டது. வசூலிக்கும்போது வட்டியுடன் வசூலிக்கப்பட்டது. இடையிலே அரசாங்கம் ஏதாவது மாறுதல் செய்தது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : மூல கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமேயில்லை. மூல கேள்வி தேசீய அபிவிருத்தி கௌன்சிலைப்பற்றியது.

SRI T. VELUCHAMI : நமது ராஜ்யத்திலே செமென்ட் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க தனியாரை நாம் எதிர்பார்க்கிறோம். நாம் அனுஷ்டிக்கும் கொள்கை சோஷலிஸக் கொள்கையாக இருப்பதனால், எந்தத் தொழிலையும் எந்த நேரத்திலும் சர்க்கார் தேசீயமயமாக்கு வார்களோ என்று அவர்கள் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கத் தயங்குகிறார்கள். இந்த நிலைமை இந்த அபிவிருத்திக் கவுன்சிலிலே விவாதிக்கப்பட்டதா ? ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் அம்மாதிரி தொழில்களை "நேஷனலைஸ்" செய்யமாட்டோம் என்பதுபோன்ற பரிகாரங்கள்பற்றி யோசனை செய்யப்பட்டதா ?

MR. SPEAKER : மூல கேள்வியிலிருந்து இந்த உப கேள்வி எழ வில்லையே.

SRI T. SAMPATH : அமைச்சர் அவர்களின் பதிலில் விவசாயத் திற்காக ஒதுக்கப்பட்ட தொகை பூராவும் செலவு செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்குக் காரணம் போதிய அளவு பயிற்சி பெற்ற ஆட்கள் நம்மிடத்தில் இல்லை. ஆகையால் சிறிது சிறிதாகத்தான் நாம் ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது. ஆகையால் எந்த அளவுக்கு செலவு செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செலவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Colleges for Women

* 442 Q.—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கவர்ன்மென்டாலும், தனிப்பட்டவர்களாலும் நடத்தப்படும் பெண்கள் கல்லூரிகள் எந்தெந்த இடங்களில் இருக்கின்றன ?